சிறந்த தகவல் ஆராய்ச்சிக்கு நாம் தயார்

எனக்கு முகங்கொடுக்க நேர்ந்த கசப்பான அனுபவம் காரணமாக சில காலங்களுக்கு முன்பே ஊழலுக்கு எதிராக செயற்படுவதை நான் கைவிட்டு விட்டேன். ஊடகவியலாளர் என்ற வகையில் கடந்த காலங்களில் ஊழல் தொடர்பான எந்தவொரு தகவலையும் நான் எழுதவில்லை. ஊழல் மற்றும் ஆராய்ச்சி ஊடகவியல் தொடர்பிலான செயலமர்வினை ஆரம்பித்து வைத்து சட்டத்தரணி திரு வெளிதமுறை அவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் என்னை சஞ்சலம் கொள்ள வைத்தது. எனது மன உறுதி குன்றியமை, தோல்வி மனப்பான்மை ஆகியன எந்த அளவிற்கு சமூகத்தை பாதிக்கின்றது என்பது தொடர்பில் என்னுள் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டது. அதன் விளைவாக தொடர்ந்தும் என்னால் மௌனமாக இருக்க இயலாது என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. உண்மையில் இப் பயிற்சி அமர்வில் பல்வேறு துறைகள் தொடர்பில் நான் பெற்ற அறிவும் விழிப்புணர்ச்சியும் காரணமாக இன்று நான் மீண்டும் மன உறுதியுடன் என் கடமைகளை செய்யக்கூடிய நிலையில் உள்ளேன்.

நாம் பேனை பிடித்து செய்யும் வேலையை ஒழுக்கத்துடன் சரியாக செய்வது உண்மையில் மிகப்பெரிய சவாலாகும். ஆயினும் அச் சவாலை வெல்ல முயல்வதன் மூலம் நாம் செய்யும் பணிக்கு எத்தகைய பெறுமதி கிடைக்கின்றது?
2009 ஏப்ரல் மாதம் 1-3 மற்றும் 28-30 ஆகிய திகதிகளில் வடமேற்கு மாகாண, பிரதேச ஊடகவியலாளர்களுக்காக நடத்தப்பட்ட ஆராய்ச்சி ஊடகவியல், பயிற்சி செயலமர்வில் பங்குபற்றிய ஊடகவியலாளர்களின் கருத்துக்களில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

நாம் வேலை செய்ய முயலும்போது அறியாமை காரணமாக சில இடங்களில் சிக்கிக் கொள்கிறோம். குறிப்பாக சட்டம் தொடர்பான விஷயங்களில்.அவதூறு தொடர்பான சட்டத்தரணி அவர்களின் விரிவுரையை பத்து பருடங்களுக்கு முன்பு செவிமடுக்க கிடைத்திருப்பின் கடந்த காலங்களில் முகங்கொடுக்க நேர்ந்த பிரச்சினைகளில் இருந்து 50 சதவீதம் விடுபட்டிருக்கலாம்.

இது இப்பயிற்சி செயலமர்வில் கலந்துகொண்ட முத்த ஊடகவியலாளர் ஒருவரின் நன்றி கலந்த வார்த்தைகளாகும். இதனை அவர் தமக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தின்போது தெரிவித்தார்.

பயிற்றுவிப்பாளர்களும் பயில்வோரும் தத்தமது அனுபவங்களை பகிர்ந்துகொள்ளக்கூடிய ஒரு செயலமர்வாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த இரு செயலமர்வுகளிலும் வடமேற்கு மாகாண ஊடகவியலாளர்களின் சங்கம், தேசிய தொலைக்காட்சி, சிரச ஊடக நிறுவனம், டி.என்.எல், சுவர்ணவாஹினி, தேரனை, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், ஹிரு, நெத், ரிவிர, லங்காதீப, திவயின, லங்கா, லக்பிம, ஐலண்ட், டெய்லி மிரர், எங்கள் தேசம், தினக்குரல், வியசிதுர பிரதேச பத்திரிகை ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 44 சிங்களம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் பங்குபற்றினர்.

ஸ்ரீலங்கா ட்ரான்ஸ் பேரன்சி இன்டர்நெஷனல் நிறுவனமும் பெட்றிக் ஈபட் மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இப் பயிற்சி செயலமர்வில் ஆராய்ச்சி ஊடகவியலாளர் போத்தல ஜயந்த, TISL ஊடக உத்தியோகத்தர் ஆனந்த ஜயசேகர ஆகியோர் பயிற்றுவிப்பாளர்களாக செயற்பட்டனர். சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா, சட்டத்தரணி ஜே.சி. வெளிதமுறை, ஊடக ஆலோசகர் டீ.சி. ரணதுங்க, TISL தொலைந்தொடர்பு பிரிவின் அத்தியட்சகர் சஞ்சய சேனாநாயக்க, திறன் அபிவிருத்திப் பிரிவின் முகாமையாளர் தனுஷ்க விஜயகோன், ஊவா மாகாண சமூக வானொலியின் ஊடகவியலாளர் வசந்த சில்வா ஆகியோர் தமது ஆற்றல்களினால் பங்களிப்பு செய்தனர்.

படங்கள் : குழு செயற்பாடுகள் - ஆராய்ச்சிகளை தயார் செய்தவண்ணம்.

ரோவன் பெரேரா
சீரஸ ஊடக அமைப்பு

கடந்த மூன்று வருடங்களாக 'ஆராய்ச்சி' எனக் கருதக்கூடிய செய்தி மற்றும் நிகழ்ச்சிகள் சிலவற்றை நான் உருவாக்கியிருக்கிறேன். எனது நிகழ்ச்சிகள் சிரச விமர்சனம் ஊடக ஒளிபரப்பப்பட்டன.

ஆயினும் எந்தவொரு நிகழ்ச்சியும் ஆராய்ச்சி ஊடகவியல் தொடர்பான தகவல்களை அறிந்து, அதன் அடிப்படையில் திட்டமிட்டு செய்யப்பட்டவை அல்ல. அந் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும்போது அது தொடர்பான திட்டங்கள் அல்லது குறிப்பிட்ட வழிமுறைகள் பற்றியதொரு தெளிவான கருத்து எம்மிடம் இருக்கவில்லை.

சில நேரங்களில் பெரும் அநீதிக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு நபர் தொடர்பான தகவல்களை ஆராய்ச்சி செய்யும் நோக்கில் முதலில் நாம் பொலீஸுக்கே சென்றோம். அந் நபரை சந்திக்க நாம் அடுத்தடியாகவே சென்றோம்.

இச் செயலமர்வின்போது ஏற்கனவே அறிந்திருந்தவற்றை மேலும் விருத்தி செய்து கொள்ளவும், இதுவரை அறிந்திராதவற்றை அறிந்து கொள்ளவும் மிகவும் பிரயோசனமாக இருந்தது. அவை எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு ஆராய்ச்சியை சீரந்த முறையில் எவ்வாறு திட்டமிட வேண்டும் என்பதை கற்றுக்கொள்ள கிடைத்தமையே நான் பெற்ற பெறுமதிமிக்க அனுபவமாகும்.

எனது மனைவியும் ஒரு ஊடகவியலாளர். நான் மட்டும் தனியாக இச்செயலமர்வில் பங்கேற்றிருந்தால் என் மனைவிக்கு இவ் அறிவினை பெற்றுக்கொள்ள ஆகக் குறைந்தது 25000 – 35000 ரூபாவாவது செலவு செய்ய வேண்டியிருந்திருக்கும். ஆகையால் குழந்தை பாடசாலை செல்வதை மூன்று நாட்களுக்குப் பின்போட்டுவிட்டு குழந்தையுடன் நாம் மூவரும் இப் பயிற்சி அமர்வில் கலந்துகொள்ள தீர்மானித்தோம்.

நான் இங்கு வருவதற்கு முன் பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் முகங்கொடுக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் எழுத்துப் பிரதியினையும் அதன் கெலட்டையும் எனது ஊடக நிறுவனத்திடம் கொடுத்துவிட்டு வந்தேன். அறியாமல்... நான் இங்கு வந்து திரும்பச் செல்லும்போது அதனை கொடுத்திருந்தால் மேலும் ஆராய்ச்சி செய்ய வேண்டியவற்றையும் இணைத்து அந்த பிரதியினை மேலும் சிறப்பாக செய்திருக்கலாம்.

எதிர்காலத்தில் நான் அதைச் செய்வேன். இதைச் செய்வேன் என சொல்வதை விட எனது அடுத்த நிகழ்ச்சியினைப் பார்த்துவிட்டு அது தொடர்பான உங்கள் கருத்துக்களை எனக்கு அறியத்தருமாறு உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

சிவில் சமூக அமைப்புக்களின் நேர்மையான செயற்பாட்டிற்கான பொன்னான சட்டங்கள்

இலங்கையில் செயற்படும் சிவில் சமூக அமைப்புக்களை மேலும் பலப்படுத்தும் நோக்கில் சிவில் அமைப்புகளால் பின்பற்றத்தக்க 'பொன்னான சட்டங்கள்' கோவை ஒன்றினை ஸ்ரீலங்கா ட்ரான்ஸ் பேரன்சி இன்டர்நெஷனல் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
அரச சார்பற்ற அமைப்புக்களின் பொறுப்பு மற்றும் செயற்பாடுகளின் வெளிப்படையான தன்மை ஆகியன தொடர்பில் பொதுமக்கள் பாரிய கவனம் செலுத்தும் இக் காலகட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்கள் அவற்றின் பணி விழுமியங்கள் மற்றும் கொள்கை ஆகியன தொடர்பில் தெளிவான நோக்குடன் செயற்படுதல் வேண்டும். அத்துடன் அமைப்புக்குள் சுறுசுறுப்பான, வெளிப்படையான நிதிக்கொள்கை மற்றும் ஜனநாயக முகாமைத்துவம் ஆகியவற்றை பேணுதலும், மக்களுக்குத் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறையினை அறிமுகப்படுத்துதலும் வேண்டும். அதனை செயற்படுத்துவதற்கு இவ் பொன்னான சட்டங்களை கவனத்திற்கொள்ளது மிகவும் பயன்தரக் கூடியதாக இருக்கும் என்பது TISL நிறுவனத்தின் நம்பிக்கையாகும் என மார்ச் மாதம் 24ஆம் திகதியன்று இது தொடர்பாக சிவில் அமைப்புக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்கில் பங்குபற்றிய வுஜுளுடு பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. ருக்ஷான் நாணயக்கார கூறினார்.

உத்தேச பொன்னான விதிமுறைகள் கோவையில் நல்லாட்சியினை பற்றி ஆர்வம் கொண்ட சிவில் சமூக அமைப்பின் நோக்கையான கட்டமைப்பு மிக்க செயற்பாட்டினை முன்னெடுக்கத் தேவையான வழிகாட்டல்களை எட்டு பிரதான தலையங்கங்களின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

1. நல்லாட்சி (Good Governace)
2. நியாயம் (Legitimacy)
3. வெளிப்படைத்தன்மை (Transparency)
4. உத்தரவாதம் (Accountability)
5. மென்மை (Integrity)
6. கண்காணிப்பு (Monitoring)
7. உறுதி (Sustainability)
8. மனிதவளம் (Human Resources)

இப்பொன்னான விதிமுறைகள் தொகுப்பு தொடர்பான பூரண விளக்கம் சிங்கள தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளின் மூலம் எமது www.tisrilanka.org இணையத்தளத்தில் தரப்பட்டுள்ளது. அதனைப் பரீட்சித்து உங்கள் கருத்துக்களை அறியத்தருமாறு TISL நிறுவனம், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் இது தொடர்பில் அக்கறை காட்டும் பொதுமக்கள் ஆகியோரைக் கேட்டுக்கொள்கிறது.

நீங்கள் ஊழல் சங்கிலியை அறுத்தெறிய விரும்புகின்றீர்களா?

நோக்கம்

இலங்கையில் வாழும் இளைஞர்களிடையே ஊழலின் பாரதூரமான விளைவு பற்றிய விழிப்புணர்வையும் ஊழலுக்கு எதிரான முயற்சிகளில் உறுதியான அக்கறையையும் உருவாக்குவதே இப்போட்டியின் நோக்கமாகும்.

யார் பங்குபற்ற முடியும்?

இலங்கை பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் இலங்கை சட்டக் கல்லூரி மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகம் போன்ற நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்கள்.

எந்த மொழியில்?

ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ்

வெற்றியாளர்கள் மும்மொழிப் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்படுவார்கள். முதலாம் இடம்: ரூ50,000 இரண்டாம் இடம்: ரூ30,000 மூன்றாம் இடம்: ரூ20,000 ஒவ்வொரு பிரிவிலும் முதல் பத்து இடங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு செல்வி நவுலி அல்லது செல்வி துலீகாவை தொடர்பு கொள்ளவும் 011-5627432 உங்களது தொடர்புகளை அனுப்ப வேண்டிய முகவரி

நீங்கள் எப்படி விண்ணப்பிக்க முடியும்?

கீழ்வரும் விபரங்களை 2009 ஜுலை 15ம் திகதிக்கு முன்னராக TISLக்கு அனுப்பி வைப்பீர்கள்.

முழுப் பெயர் : (வணபிதா/திரு/திருமதி/செல்வி)

முகவரி :

தொலைபேசி :

மின்னஞ்சல் (இருக்குமாயின்) :

உயர்கல்வி நிறுவகத்தின் பெயரும் முகவரியும் :

மாணவர் பதிவிலக்கம் :

கற்கை வருடம்/ மட்டம் :

பீடம்/ துறை :

விருப்பமான மொழி :

நேர்மைத்திறன்

டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா - செய்தியறிக்கை வெளியீடு 5 ஏப்ரல் 2009

"நாம் ஊழலைக் குறைத்துவிட்டோம்"

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் பீ.பீ. அபேகோன்

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றியும் அதன் எதிர்விளைவுகள் பற்றியும் எமது திணைக்களத்தின் ஊழியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியதனால், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தொடர்பில் நீண்டகாலமாக மக்கள் மனதில் படிந்திருந்த அவப்பெயரை முற்றாக அகற்ற முடிந்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் பீ.பீ. அபேகோன் கூறுகின்றார். கடந்த வருடம் திணைக்களத்தின் அடிமட்ட ஊழியர்கள் முதல் உயர் மட்ட உத்தியோகத்தர் வரை இவ்விழிப்புணர்வினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அத்தோடு ஸ்ரீலங்கா ட்ரான்ஸ் பேரன்சி இன்டர்நெஷனல் நிறுவனத்தினால், செயற்பாட்டு அதிகாரிகளை இதுக்காகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட நான்கு பயிற்சி கருத்தரங்குகளில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் கருத்துக்களில் பயன்தரக்கூடிய பாரிய மாற்ற ஏற்பட்டிருப்பதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சுட்டிக்காட்டுகிறார்.

இப் பயிற்சியில் நானும் கலந்து கொண்டேன். பயிற்சிகளில் கலந்து கொண்டதன் பின்பு எமது ஊழியர்களிடம் நான் பெரும் மாற்றத்தைக் காண்கின்றேன். குறிப்பாக மக்கள் தொடர்பாடலின்போது 'இயலாது' என்ற வார்த்தையினை உச்சரிக்கும் விதத்தைக் கொண்டு, மக்கள் பல அசௌகரியங்களை பெற்றுக் கொள்கின்றனர் என்பது தொடர்பில் எமது ஊழியர்கள் பயிற்சியில் பின் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர் என்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

எந்தவொரு நிறுவனத்திலும் லஞ்சம் மற்றும் ஊழல் ஆகியன தலைதூக்குவதற்கு அதிகாரிகளினதும் ஊழியர்களினதும் அறியாமையே காரணமாகும். இதனால் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் பிற நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் பல்வேறு மோசடிகளில் ஈடுபட வாய்ப்புக்கள் உருவாகின்றன. ஊழியர்களிடத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நிறுவனத்தில் பாரிய மாற்றத்தினை கொண்டு வரலாம். பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் பதில்களைப் பார்க்கும்போது ஏற்கனவே நாம் அந்த மாற்றத்தினை செய்திருப்பது தெரியவருகிறது. முக்கியமாக

TISL பயிற்சியின் போது சில நாடுகளின் அரச அதிகாரிகளால் அப்பாவி ஏழை மக்களை வாட்டி வதைத்து துன்புறுத்தும் விதம் தொடர்பாக காண்பிக்கப்பட்ட வீடியோ காட்சிகள் எமது அதிகாரிகளின் மனங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

குறைநிறைகளை அறிந்து, அவற்றை நிவர்த்தி செய்யும் கூட்டு முயற்சியில் ஈடுபட்டு ஒரு அரச திணைக்களம் என்ற வகையில் 'மக்கள் புகார்' தொடர்பில் தாம் மிகுந்த கவனம் செலுத்துவதாகவும் திணைக்களத்தின் பணிகள் தொடர்பில் மக்களுக்குத் தென்படுகின்ற எந்தவொரு குறைபாடாக இருப்பினும் நேரடியாக அல்லது மறைமுகமாக தமக்கு அறியத்தருவதன் மூலம் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினை மேலும் விரிவுபடுத்த பொதுமக்கள் தமது ஒத்துழைப்பை வழங்குமாறும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றார்.

உள்ளே

2 ஆசிரியர் தலையங்கம்

3 வங்கி மற்றும் நிதி ஆணைக்குழுவொன்றினை கோருதல்

4 இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய பயிற்சியினை பெற்ற அரச ஊழியர்கள் கூறுகின்றனர்.

5 சிறந்த தகவல் ஆராய்ச்சிக்கு நாம் தயார்

6 சிவில் சமூக அமைப்புக்களின் நேர்மையான செயற்பாட்டிற்கான பொன்னான சட்டங்கள்

நேர்மைத்திறன்

செய்தியறிக்கை
வெளியீடு 5 ஏப்ரல் 2009

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா
28/1 புள்ளர்ஸ் ஒழுங்கை
கொழும்பு 07

தொலைபேசி - 0112501474
ப்க்ஸ்: -011 2592287
மின்னஞ்சல் - tisl@tisrilanka.org
மின்தளம் - www.tisrilanka.org

ஆசிரியர் தலையங்கம்

இலங்கை இரத்த வங்கி காலாவதியான இரத்த ப்லஸ்மா உபகரணங்களை உபயோகப்படுத்தி மேற்கொண்ட மோசடியினை கடந்த காலத்தில் ஊடகங்கள் மூலம் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டன. அதனால் அம் முறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் பெரும் எண்ணிக்கையிலான உயிர்களை காப்பாற்றவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. அம் மோசடியினை வெளிச்சத்திற்கு கொண்டுவர சாதாரண ஊழியர்கள் சிலரே முன் நின்று உழைத்தனர்.

ஒரு நாட்டில் இடம்பெறும் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் ஊழல் ஆகியவற்றுக்கு எதிராக ஊடகங்களினால் ஆற்றக்கூடிய பணி மிகப் பெரியதாகும். பல்வேறு கூறைகளைச் சார்ந்த ஜாம்பவான்கள் பாரிய மோசடிகள், ஊழல்களை புரியும்போது சுதந்திர ஊடகத்தற்கு சாதாரண மக்களுடன் இணைந்து அவ் ஜம்பவான்களின் தவறுகளை உலகிற்கு வெளிச்சமிட்டு காட்ட வாய்ப்பு கிடைக்துள்ளது. ஆகையால் இலஞ்ச ஊழலினால் கஷ்டப்படுகின்றவர்கள் எப்போதும் சுதந்திர ஊடகத்தையும் ஊடகவியலாளர்களையும் தமது ஜன்ம எதிரிகளாகவே கருதுகின்றனர்.

கடந்த காலங்களில் குறிப்பாக அரச துறையில் இடம்பெற்ற ஊழல்களை வெளிச்சமிட்டுக்காட்டிய பெருமளவிலான ஊடக நிறுவனங்களும், ஊடகவியலாளர்களும் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. ஒரு நாட்டின் ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுவது என்பது அந்நாட்டு மக்களுக்கு தகவல்களை அறிந்துகொள்ள கிடைத்திருக்கும் சுதந்திரத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தலாகும்.

குறுகிய நோக்கங்களுக்காக ஊடகங்களை ஒடுக்க எத்தனிக்க எண்ணுபவர்களின் எண்ணங்கள் கைகூட பொதுமக்கள் தமது உரிமைகள் தொடர்பில் மௌனமாக இருப்பதே காரணமாகும்.

நேர்மையான தேசத்தினைக் கட்டியெழுப்ப துணைநின்றோருக்கு ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் மறியாதை செலுத்துகிறது

இலங்கையினை நேர்மையான தேசமாக மாற்றும் நோக்கத்துடன் தமது வாழ்நாள் முழுவதும் அரும்பாடுபட்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மூன்று பேர் கடந்த ஜனவரியில் எம்மை விட்டுப் பிரிந்தனர்.

ஜனவரி 08ஆம் திகதியன்று கொடுமாக கொலையுண்ட சண்டே லீடர் ஆசிரியர் திரு. லசந்த விக்கிரமதுங்க அவர்கள் இலங்கையின் ஊழல்களுக்கு எதிராக முன்னோடியாக செயற்பட்ட துணிச்சல்மிக்க ஊடகவியலாளர் ஆவார்.

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனத்தின் நேர்மைக்கான சர்வதேச விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட முதல் ஊடகவியலாளர் ஆவார். படுகொலை செய்யப்படும் வரை அவ் உயர் விருதினைப் பெற்று உயிர்வாழும் ஊடகவியலாளர் அவர் ஒருவராகவே இருந்தார். திரு. லசந்த விக்கிரமதுங்க அவர்கள் ஊடகச் சுதந்திரத்துக்காக ஆற்றிய சீரப்புமிகு பணியினை பாராட்டும் வகையில் சில தினங்களுக்கு முன் அவருக்கு சர்வதேச யுனெஸ்கோ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

திரு. உபநந்த சேனாரத்ன அவர்களும் உண்மையிலேயே நேர்மையான குடிமகனாக உயிர்வாழ்ந்த அரச பணிக்கு தம்மை ஒரு அடையாளமாக நிலை நிறுத்திய கன்னியமான அரச அதிகாரியாவார். அரசியல்வாதிகள் தமது குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள மேற்கொண்ட தீய முயற்சிகளுக்கு எதிராக தமது உயிரையே பணயம் வைத்து அவர் செயற்பட்டார். அரசியல்வாதிகள் தமது அதிகாரங்களை துஷ்பிரயோகிக்க முயலும் வேளைகளில் அச் செயல்களுக்கு எதிராக சட்டத்தின் துணையினை நாடிய அவர், அளவு நிரவு திணைக்களத்தின் அத்தியட்சகர் என்ற வகையில் ஊழலுக்கு எதிராகப் போராடி அத் திணைக்களத்தினை கரப்பாற்றினார். அவரின் பணியைப் பாராட்டும் நோக்கில் 2005ஆம் ஆண்டிற்கான நேர்மைக்கான ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் தேசிய விருதினை அவருக்கு வழங்கி கௌரவித்தது.

நேர்மை ஒழுங்கு தவறாத, முன்மாதியான செயற்பாடு ஆயின தொடர்பில் மிகச்சீறந்த உச்சநீதிமன்ற நீதவானான மார்க் பிரணாந்து அவர்கள் இலங்கையில் ஒரு நேர்மையான தேசமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கில் தனது முக்கிய பங்களிப்பினை வழங்கிய மதிப்பிற்குரிய குடிமகனாவார்.

உச்ச நீதிமன்ற நீதவான் என்ற வகையில் அவர் வழங்கிய தீர்ப்புக்கள் நாட்டின் வெளிப்படையான செயற்பாடுகள் மற்றும் நல்லாட்சி ஆகியன தொடர்பில் முற்போக்குமிக்க பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. அத்தோடு அவ்வாறான தீர்ப்புக்கள் நிர்வாக மற்றும் அரசியல் யாப்பு சட்டம் தொடர்பில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தக் காரணமாக அமைந்தது.

இலங்கை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு எவ்வேளையிலும் தனது நல்லாசிகளை வழங்கி வந்த அவர், நேர்மைக்கான முதலாவது கௌரவிப்பு விழா பிரதம அதிதியாக கலந்து சீறப்பித்ததன் மூலம் அவ்விழாவிற்கு பெருமை சேர்த்தார். அதேபோன்று 2007ஆம் ஆண்டுக்கான ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெஷனல் விருது வழங்கும் குழுவில் தலைவராகவும் அவர் செயற்பட்டார். மதிப்பிற்குரிய மூன்று இலங்கை குடிமக்களும் நமது நாட்டின் நலனுக்காக ஆற்றிய பணியினை இலங்கை இலங்கை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம் கௌரவிப்பதுடன் தனது மரியாதையையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

வங்கி மற்றும் நிதி ஆணைக்குழுவொன்றினை கோருதல்

இந்நாட்டில் நிதி நிறுவனங்கள் சிலவற்றில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதார மற்றும் நிதித் துறைகளின் ஸ்திரத்தன்மையினை தக்கவைத்துக் கொள்வது எவ்வாறு என்பது தொடர்பில் காரணங்களை ஆராய்ந்து உரிய நடைமுறைகளை பரிந்துரைப்பதற்காக வங்கி மற்றும் நிதி ஆணைக்குழு ஒன்றினை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

தனியார்துறை தொழில்நுட்ப நிபுணர்கள், புத்திஜீவிகள், ஊடக பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் அங்கத்தவர்கள் ஆகியோர் பங்குபற்றிய கலந்துரையாடலின் பின் இவ்வாறானதொரு ஆணைக்குழுவின் அவசியத்தினை முன்மொழிந்து ஜனாதிபதி ஆணைக்குழுவின் அவசியத்தினை முன்மொழிந்து ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் மூலம் இந்த யோசனையினை முன்வைக்கப்பட்டுள்ளது.

நிதித்துறையில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் தொடர்பில் மக்களின் நம்பிக்கையினை கட்டியெழுப்பப்பட வேண்டியதன் அவசியம் பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலின் பின் எமது நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்திஜீவிகளின் ஒன்றுகூடலின்போது நிதி நிறுவனங்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புத்தன்மை போன்றவற்றில் காணப்படும் குறைபாடுகளே நெருக்கடி நிலமை ஏற்பட்டக் காரணம் எனக்கூறப்பட்டது.

உலக நிதி நெருக்கடியின் தாக்கத்தை விட நிதித்துறையில் சீரற்ற முகாமைத்துவமும் முறையான நிர்வாகம் அற்றமையுமே இந்நிலை ஏற்பட்க காரணமாகும் என்பதனை இக் கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

தேசிய நேர்மைத்திறன் விருதுக்கான பிரேரிப்புக்கள் -2009

ஊழலுக்கெதிராக போராடிய மற்றும் போராடிக் கொண்டிருக்கின்ற இலங்கையைச் சேர்ந்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை கௌரவப்படுத்தும் முகமாக வழங்கப்படும் தேசிய நேர்மைத்திறன் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தனிநபர் அல்லது நிறுவனம் இவ்விருதுக்காக முன்றாம் நபர் மூலம் பிரேரிக்கப்பட வேண்டும்.

பிரேரிக்கப்படுபவர்கள் கட்டாயமாக இலங்கையில் ஊழலை குறைப்பது அல்லது இல்லாதொழிப்பது தொடர்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை வெளிப்படுத்துகின்ற புதுமையான, சிறந்த வழிகாட்டுதல்களான மற்றும் நம்பிக்கையூட்டுவதான செயலை / செயல்களை செய்திருக்க வேண்டும். இவர்கள் தேசிய நேர்மைத்திறன் விருதை பெறுவதற்காக பரிசீலிக்கப்படுவார்கள்.

தனிநபர், அரசாங்கம் அல்லது தனியார் நிறுவனங்கள் அல்லது சமூக நிறுவனங்கள் எவரும் பிரேரிப்பவராக இருக்கலாம்.

பிரேரிப்பு வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

தேசிய நேர்மைத்திறன் விருதுகள் - 2009
ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா
இல 28/1, புள்ளர்ஸ் ஒழுங்கை, கொழும்பு 07.

ப்க்ஸ்: - 011 2592287
மின்னஞ்சல - nia@tisrilanka.org
மின்தளம்: - www.tisrilanka.org

மேலதிக விபரங்களுக்கும் செல்வி. நவுலி 011 5627432 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 31 ஆகஸ்ட் 2009

விருதுகள் சுயாதீனமான நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.
இவ்விருதானது டிசம்பர் 9ஆம் திகதி ஐக்கிய நாடுகள் ஊழல் எதிர்ப்பு தினத்தன்று வழங்கப்படும்.

அரச சேவையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முடியும் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய பயிற்சியினை பெற்ற அரச ஊழியர்கள் கூறுகின்றனர்.

**ஒரு நாட்டின் ஊழலை அளவீடுவதற்காக பயன்